

**வாரந்தோறும் ஒரு தீபம்!**

**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும்,**
**என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.**
**(சங்கீதம்119:105)**

**(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)**
**(வியாழன்தோறும்)**

| 04.07.2019 | 8. கல்லறை திறந்திடும் இரகசியம்! |
|---|---|



இவ்வளவு பெரிய கல்லை 'எனக்காக' யார் புரட்டித் தள்ளிட முடியும்? என மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாய் மரியாளும், சலோமேயும் திகைத்து நின்றது போல்தான் இந்த மானிட வாழ்க்கை உள்ளது! கேள்விக்கு கிடைத்த அதிசய விடை எது தெரியுமா? **"எழுந்தார் இறைவன்!"** என்ற சுவிசேஷ - நற்செய்தியே ஆகும்! **"சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசு... உயிர்த்தெழுந்தார்!"** *(மாற்கு.16:1-7).*

பாவ சோதனையோ, கொல்கொதா போன்ற சூழ்நிலை அவச்சொல்லோ, தீதுமொழிகளோ, கசந்த காடியின் அனுபவங்களோ.... எதுவாயிருந்தால் என்ன? 'தன் சிலுவை' சுமந்து 'தன் சுயம்' சிலுவையிலறையுண்டு வாழ்ந்திடவே கவனம் கொண்டால்.... அவரோடு சிலுவையிலறையப்பட்ட யாதொருவனும், அவரோடு எழுந்திருப்பான்! *(கலா.2:20).* அவரோடு எவ்வித கொடிய சூழ்நிலையையும் 'ஜெயித்தெழுந்து' ஆளுகை செய்வான்!! இந்த அதிசய விடை தரும் **"சிலுவையின் உபதேசம்"** கெட்டுப் போகிறவர்களுக்கு பைத்தியமாய் தோன்றலாம்..... இரட்சிக்கப்படுகிற நமக்கோ, வாழ்வின் 'பெருங்கல்லையும்' புரட்டித் தள்ளும் தேவ பெலனாய் இருக்கிறது! *(1கொரி.1:18).* ஆமென்!

**- ரத்னம்**